# இந்து கலாசார நிதியம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, இந்து கலாசார நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒரு கோவிலுக்குரிய நிலையான வைப்புகளிலிருந்து 2011 ஆம் ஆண்டின் பொருட்டுப் பெறப்பட்ட ரூபா 173,959 வட்டி வருமானமானது இந்நிதியத்தின் வருமானமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தமை மீளாய்வாண்டின்போது திருத்தத்திற்குள்ளானபோது முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக வருமான, செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | |
| பந்தி 4.1(இ) | ஆண்டிற்கான செலவினம் அங்கீகரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

பந்தி 4.2 தவறில்லாத கணக்கீட்டுப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணி திருப்திகரமான கணக்கீட்டு முறைமையை நிதியம் மேற்கொள்ளவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா 1,623,544 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,298,301 ஆகும். ஏனைய வருமானம் ரூபா 1,434,071 அதிகரித்தமையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட மீளாய்வாண்டின் ரூபா 325,243 நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணியாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

**(அ) 2012 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் செயல் திட்டத்தின் பிரகாரமான செயற்திறன்**

நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் முன்னேற்றம் காணப்பட்டபோதும், பௌதீக செயற்திறன் நலிவுற்ற நிலையிலேயே இருந்தது. செயல் திட்டத்தின் பிரகாரம் ரூபா 4 மில்லியன் மதிபீட்டிலான நிதியேற்பாட்டின் மூலம் 3 நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டமிட்டபோதும், அதில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் முற்றாகச் செயற்படுத்தப்படவில்லை. மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் 40 சதவீதமாக அமைந்திருந்தது. எஞ்சிய நிகழ்ச்சித்திட்டம் திட்டமிட்டவாறு செயற்படுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களது பௌதீக இலக்குகள் குறிப்பிடப்படாமையால் அவற்றை மதிப்பாய்வு செய்ய முடியவில்லை.

**(ஆ) நிதியத்தின் ஒட்டுமொத்தச் செயற்திறன்**

இந்து கலாசார நிதியத்தின் இலக்கையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ சேகரிப்பதற்கான சட்டபூர்வ ஏற்பாடு இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. அச்சட்டபூர்வ ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, அபிவிருத்தி செய்யவேண்டிய இந்து வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இந்து சமயம், கலாசாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு

நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்த இயலுமானபோதும், நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையினர் அதன்பொருட்டு முறையாகக் கவனம் செலுத்தவில்லை. 2012 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் மொத்தப் பெறுவனவுகளில் 52% ஆனது அந்நிதியத்தையும் நோக்கங்களை நிறைவேற்றாது விளைவற்றுக் காணப்பட்ட நிதிய முதலீட்டால் பெறப்பட்ட நலன்களையுமே உள்ளடக்கியிருந்தது. அவ்வாறே, ஆண்டின்போது ஒரு கோவிலது நிதியிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 1,200,000 செலவிடப்படுவதற்குரிய குறிப்பிட்டதொரு வேலைத் திட்டமும் இல்லாமையால் அத்தொகையும் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகள் கொள்வனவு செய்தல்**

மீளாய்வாண்டின்போது 2 சந்தர்ப்பங்களில் ரூபா 950,000 கூட்டுதொகை செலவிடப்பட்டு அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு பங்கிடுவதற்காக சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட வேண்டிய சாரிகளுக்குப் பொருத்தமான மாதிரிகள் தயாரிக்கப்படாமையால் வழங்குநர்களைத் தெரிவு செய்கையில் சாரிகளின் தரம் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. மேலும், கொள்வனவு நடைமுறைகளில் நிலவிய குறைபாடுகளின் காரணமாக, நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 50,000 ஆகும்.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுகையும்

**செயல் திட்டம்**

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் அறிவுறுத்துரைகளுக்கமைய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. அதனோடு தொடர்புடைய 1985 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு அதன் இலக்கையும் நோக்கங்களையும் நிறைவேற்றக்கூடியவாறு முறையான செயல்திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவு